பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 01 புதன்கிழமை (15-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 50

# மக்கள் மீதான ஷெல் தாக்குதலை நிறுத்துமாறு செஞ்சிலுவை கோரும்

## இன்று பலாலியில் முக்கிய பேச்சு

யாழ்ப்பாணம், ஜனவரி 15

குடாநாட்டில் வாழும் பொது மக்கள் மீது, அவர்கள் வாழும் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழப்பதையும், காயமடைவதையும், பாதிக்கப்பட்டு இடம்பெயர்வதையும் தடுக்கவேண்டும்.

—இவ்வாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, இராணுவ உயர் அதிகாரிகளிடம் கோரவுள்ளது. பலாலி சென்றுள்ள குழுவின் பிரதிநிதிகள் இது குறித்து இன்று பலாலி முகாம் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சு நடத்துவர் என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் பலாலிக்குச் சென்றுள்ளனர்.

அண்மைக் காலமாக இராணுவத்தினர் பலாலி முகாமிலிருந்தும், தாம் நிலைகொண்டுள்ள ஏனைய பிரதேசங்களில் இருந்தும் நடத்திய ஷெல் தாக்குதல்களினால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அது பற்றிய விவரங்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் எடுத்துச் சென்றுள்ளனர். பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்குமாறு அவர்கள் இராணுவ உயர் அதிகாரிகளிடம் வற்புறுத்துவர் என எதிர்பார்க்

[7 ஆம் பக்கம் பார்க்க]

# தடுத்து வைக்கப்பட்ட மீனவரை விடுவிக்க கோரி நகரில் பேரணி

## பெண்கள், மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில்

யாழ்ப்பாணம், ஜன.15

தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மீனவர்களை விடுவிக்குமாறு கோரியும்—

மீனவர்களின் ஜீவனோபாயத்துக்கு வசதி செய்யும் விதத்தில் கடலில் தொழில் வலயம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரியும்—

நேற்று யாழ்ப்பாண நகரில் மீனவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மாணவர்களும் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

பேரணியில்கலந்துகொண்ட பெண்கள் வாடிய மேனியராய், ஒட்டி உலர்ந்த உடலுடன் காணப்பட்ட சிறுவர்களையும், கைக்குழந்தைகளையும் ஏந்திய வண்ணம் சென்றனர்.

யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜரைக் கையளிக்கச்சென்ற வேளை பெண்கள் தங்கள் பட்டினி நிலையைக் கூறி ஓலமிட்டுக் கதறி அழுதனர்.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை, அராலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர் அமைப்புகள் அந்த ஊர்வலத்துக்கு ஏற்பாடுசெய்திருந்தன.

[7 ஆம் பக்கம் பார்க்க]

### இன்று விடுமுறை

பொங்கல் திருநாளை முன்னிட்டு உதயன் பணிமனை இன்று மூடப்பட்டு இருக்கும். அதன் காரணமாக நாளை வியாழக்கிழமை (16-1-92) மட்டும் உதயன் வெளிவர மாட்டான். நாளை மறுதினம் வழமைபோல பத்திரிகை வெளிவரும்.

## தீவுப்பகுதிக்கு இங்கிருந்து 300 பேர் கப்பல் மூலம்

யாழ்ப்பாணம், ஜன. 15

கடந்த அக்டோபர் மாதம் தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து, அங்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது யாழ்ப்பாணத்தில் உறவினர்களுடனும் அகதி முகாம்களிலும் தங்கி உள்ள சுமார் 300பேரை கப்பல் மூலம் அங்கு அழைத்துச் செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இவர்களில் 150 பேர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள். மிகுதியானோர் நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் சொந்த அலுவல்கள் நிமித்தம் யாழ்ப்பாணம் வந்து பின்னர் திரும்பிச் செல்லமுடியாது இங்கு தங்க நேர்ந்தது குறிப்பிடத்தக்கது. [இ-3]

### முச்சந்தி முரளி



தை பிறந்திட்டுது...... வழி பிறக்குமோ......?

## மோட்டார் சைக்கிள் மோதி நேற்று இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 15

நேற்று இரு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் இரு முதியவர்கள் மரணமானார்கள்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடிக்கும் தட்டாதெருவுக்கும் இடையில் இடம்பெற்ற விபத்தில் வீதியைக் கடக்க முயன்ற புங்குடுதீவைச் சேர்ந்த கந்தையா சிவகுரு (75 வயது) என்பவர் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு அதே இடத்தில் மரணமானார். மோட்டார் சைக்கிளில் வந்தவரும் காயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

மற்றைய விபத்து தெல்லிப்பளை பிரதான வீதியில் இடம்பெற்றது. தெல்லிப்பளையைச் சேர்ந்த கே. தம்பு [வயது 70] என்பவரே அந்த விபத்தில் மரணமானவர் ஆவார். இவரும் மோட்டார் சைக்கிளில் மோதுண்டே... [இ-15]



## பொங்கல் வாழ்த்து

வையகம் வாழ, வையகத்து சீவராசிகள் வாழ, மனிதன் வாழ, அவன் வாழ்வு வளம்பெற மூலசக்தியாக நின்று உதவிய சூரியனுக்கும் — இயற்கைக்கும் பொங்கலிட்டு வணங்கி, எல்லோர் வாழ்விலும் சீர்பொலிய வழுத்தும் இந்நங்கை நல்லாளைப் போல —

வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், விநியோகஸ்தர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும்

உதயன் தனது பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறான்.

எங்கும் இன்பம் பொங்குக !
எங்கணும் மங்களம் தங்குக !!

## மருந்து விற்பனைத் தடைக்கு சுதேச வைத்தியர் கண்டனம்

யாழ்ப்பாணம்' ஜன. 15

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஆங்கில மருந்து வகைகளை, சுதேச வைத்தியர்களுக்கு விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டதைக் கண்டித்து சுதேச வைத்திய அபிவிருத்திச்சங்கமும், சித்தமருத்துவ மாணவர் மன்றமும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

தனியார் மருந்து விற்பனவு நிறுவனங்கள் கொழும்பில் இருந்து கப்பல்மூலம் தருவித்த ஆங்கில மருந்துகளை, விற்பனையாளர்கள் சுதேச வைத்தியர்களுக்கு விற்கக்கூடாது என்று நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த முடிவை ஆட்சேபித்து மேற்கூறிய இரு சங்கங்களும் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்ப

(7ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மிதிவெடி! 4 படையினர் கால் இழப்பு!!

நேற்று முன்தினம் வவுனியாவில் தாண்டிக்குளம், பேயாடிகூழாங்குளம் இராணுவ முகாம்களில் இருந்து முன்னேறிய படையினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நான்கு படையினர் மிதிவெடிகளில் கால்களை இழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
★ வாடிக்கையாளர்கள்

— அனைவருக்கும் —

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

உரித்தாகுக!

**சந்திரன்ஸ் வர்த்தக நிலையம்,**

SB 5, கந்தை உட்புறம், சாவகச்சேரி.

[சி-1336]


## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 15

பலாலி ஆசிரிய கலாசாலையின் சஞ்சிகையான ''கலாவதி'' வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும். கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

## பெண்ணின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று சுன்னாகம் காவல்துறையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ரஞ்சினிதேவி [வயது 23] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-15]


## சற்குரு கல்வி நிலையம்

276, ஆடியபாத வீதி, சந்திரசேகப் பிள்ளையார் வீதி, நல்லூர்.

மாணவர்களே !

உங்கள் அதிசிறந்த கல்விக்கு நாடுங்கள்

''சற்குரு கல்வி நிலையம்''

பாலர் வகுப்பு தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் சிறந்த பயிற்றப்பட்ட அனுபவமுடைய ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

[19352] — அதிபர்


## யாழ்ப்பாண மாநகர சபை

### பொதுமக்களுக்கு ஓர்
# முக்கிய அறிவித்தல்

யாழ். நகர மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு, பின்வரும் சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிப்போர் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரூபா 500/-க்கு மேற்படாத தண்டம் விதிககப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

மாநகர சபையின் சுகாதார சேவை சிறப்புற நகர மக்கள் புரிந்துணர்வுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. கழிவு நீரோடும் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைப் போடுதல் அல்லது வாய்க்கால்களை மூடி கட்டடங்களை நிர்மாணித்தல்.
2. வீதிகளில் குப்பைகளைப் போடுதல்.
3. வெற்றுக் காணிகளுக்குள் அல்லது வளவுகளுக்குள் செடிகள், பற்றைகளை வளரவிடுதல், நீர்தேங்கி நிற்கும் வகையில் பாவனைக்குதவாத பழைய பொருள்களைக் குவித்து வைத்திருத்தல், குண்டு குழிகளை மூடாது வைத்திருத்தல்.
4. நாய், ஆடு, மாடு, பன்றி போன்றவற்றைக் கட்டாக்காலியாக அலையவிடுதல். (பிடிக்கப்படும் கட்டாக்காலிகளைப் பராமரிக்கும் செலவும் தண்டத்துடன் சேர்த்து அறவிடப்படும்).

மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
09 - 01 - 1992 [சி/1325]


## அறிவித்தல்

கடந்த 16-11-1991 அன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் நிகழ்ச்சிகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் கழுவி தயாராகவுள்ளன. விரும்பியோர் பெற்றுக் கொள்ளலாம்.

**வேந்தா போட்டோ**
[மனோகரா தியேட்டர் முன்னால்]
500 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/1337]



## யாழ். றோட்டராக்ற் கழகம் நடாத்தும்

### வளரும் கலைஞர்களின் புகைப்படக் கண்காட்சி

1992 ஆம் ஆண்டு தை மாதம் 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற இருந்த இக் கண்காட்சி பின்வரும் தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

1992 பெப்ரவரி 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பிற்பகல் 2 மணி — 5 மணி வரை

1992 பெப்ரவரி 15 ஆம் திகதி காலை 9 மணி — 5 மணி வரை

நன்றி.

றோட்டராக்ற் கழகம்,
யாழ்ப்பாணம்.
[சி/1402]



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

### உதவித் தாதிகள் பயிற்சி நெறி
### [NURSE - AID COURSE]

மேற்படி பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சியில் விருப்பமும், ஆர்வமும் உள்ளோர் தமது அனுபவம், ஆற்றல், கல்வித் தகைமை ஆகியவற்றை 24-01-1992க்கு முன்பாக அறியத்தரவும். 25-01-1992 பிற்பகல் 2-00 மணிக்கு எமது பணிமனையில் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/1326)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

யாழ்., பேராதனை பல் கலைக் கழகத்துக்கான

**GAQ**
**1st. in Com.**

**புதிய 2 ஆவது பிரிவு**
ஆரம்பம்:- **18-1-1992**
காலை 8 மணி

**வரலாறு**
நாடகமும் அரங்கியலும்
ஆரம்பம்:- **18-1 1992**
பிற்பகல் 3 மணி

எஸ். அருள்நங்கை
[சி/1296] நிர்வாகி



## மக்னெற் இன்ஸ்ரிரியூட்

செங்குந்த ஒழுங்கை,
கல்வியங்காடு.

92ஆம் ஆண்டிற்கான ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புகள் நடைபெறுகின்றன,

விஞ்ஞானம் — ★ ஜே. ஆர். சூரி
கணிதம் — ★ வாமதேவன்
ஆங்கிலம் — சத்தியபாலன்
சமூகக்கல்வி — கோபி
தமிழ் — துரைராஜா
வர்த்தகம் — இராஜன்
[சி/1330]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 10 — 1901

மறைவு: 17 — 12 — 1991

அமரர்

### சின்னத்தங்கச்சி ஐயாத்துரை

பெற்று வளர்த்துப் பேணிக் காத்த
பெருந் தெய்வமே
என்றும் எங்கள் மனதை விட்டு
அகலாத தாயாரே
எங்கு தேடினும் கிடைத்திடாய்
பெரும் களஞ்சியமே
எங்களுக்காய் வாழ்ந்த எங்கள்
அன்னையே!

எம் வாழ்வுக்கு ஒளிவிளக்காய் நின்று, அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(19348)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### முருகுப்பிள்ளை வடிவேலு
(பத்தர்)

மலர்வு: **1928-06-20**

உதிர்வு: **1991-01-14**

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
(மகன்) குலசிங்கம்
குடும்பத்தினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[19355]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பொங்கல்!

## புது வாழ்வு மலர்க!

கங்குல் கிழித்து கதிரவன் எழும்பும்
திங்கள் தையின் தேதி ஒன்றில்
மங்கல மங்கையர் மாக் கோலமிட்டு
பொங்கல் செய்வர் பொற்புறு மனைகளில்
சங்கம் முதலாய் தமிழர் விழாக்கள்
பங்கம் இன்றிப் பரிவுடன் நடந்தன
எங்கும் இன்பம் பொங்கித் ததும்ப
மங்கல் இன்றி வாழ்வு மலர்க.

- வாசுகி சிவராமலிங்கம்

## வெற்றி காண்போம்!

கன்னலைப் பிழிந்த சாற்றில் கண்டுடன் பாலுஞ்
சேர்த்து
சென்னெலின் அரிசி கொண்டு சிவகரனை வழுத்தி
இன்னல்கள் விலகியோட வினிய தமிழ்நாள் பொங்க
உன்னதமாகச் சேர்ந்து உவந்துமே வெற்றி காண்போம்

★ ★ ★

அலைகடல் சூழ்ந்த நாட்டில் அனைவருஞ்
சேர்ந்தொன்றாய்
நிலைவரமான வாழ்வை நினைந்துமே போரைச் செய்து
தலைமையாம் நிலைமை யெய்தித் தாரணிதனில் வாழ
கலையுடைக் கதிரைப் போற்றிக் காலையிற்
பொங்குவோமே.

சைவமணி சோ. க. வேலாயுதர்

## முந்திய கதையாயிற்று!

கழனிகள் எல்லாம் எரிகுண்டு வீழ்ந்து
கானக மாகிக் காய்ந்தன இன்று
பழந்தரு கனிமரம் ஒன்றும் இல்லை
பகைவரின் நெஞ்சால் அவையும் சாம்பல்
இன்புறப் பொங்கி அமுதினை உண்ண
ஆவதன் மடியில் பாலதும் இல்லை
உழவர் திருநாள் உற்பத்திப் போரில்
உலகம் எங்கும் புகழைச் சொல்லும்!

செந்நெல்லுப் பச்சையை எடுத்துக் குற்றி
செங்கரும்புச் சாறுடனே பாலும் கலந்து
மொந்தன் கதலி வாழை பலா மாவும்
முன்றலிலே படைத்திருக்க, பசுவின் நெய்யோ
சிந்துகின்ற உலைவாயில் கமக மக்க
சிற்றாடை கட்டிநின்று சிறார்களெல்லாம்
ஐந்தாறு வெடிகொளுத்தி மகிழ்ந்த காலம்
முந்திய கதையாய் போனது தானே!

- நவாலியூர் கவிராயர்

## ஏர் பின்னே உலகம்!

பாலும் புது அரிசி
பாங்காய் இணைந்து பொங்க
ஏர் காளையோ டுழவன்
எழில்சேர் மழலை பொங்க
வாழும் உலகம்
ஏர் பின்னே என்ற தமிழ்
கூறும் திருக் குறளை
நினைவூட்ட வந்தாள் தை மகளாள்!

- நெடுந்தீவு லக்ஸ்மன்

# உழைப்பெனும் ஆயுதம் ஏந்தி விளைவு காணும் நாள்!

## அது கண்டு இன்பம் மலரும் பொங்கல் திருநாள்

உலகின் பண்டைய சமயங்களில் சூரியக் கடவுளுக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பழைய பழக்க வழக்கங்கள் எல்லா மனிதருக்கும் பொதுவாக இருந்து வருவது போல பொங்கல் பண்டிகையும் ஒரு மனிதனின் ஆதிப் பழக்கத்தை, இயற்கையை வழிபடும் அதற்கு நன்றி தெரிவிக்கும் உயர்ந்த பழக்கத்தை, பண்பை நினைவு படுத்தும் நாளாக விளங்குகிறது.

சூரியன் உலக சீவராசிகளுக்கு வாழ்வளிக்கும் தெய்வம். எல்லா இயக்கங்களும் சூரிய சக்தியின் அடிப்படையிலேயே செயலாகி வருகின்றன. சூரியசக்தி கூடினாலும் சரி, குறைந்தாலும் சரி உலகில் சீவராசிகள் உயிர்வாழப் போவதில்லை. சூரிய வணக்கம் ஆதித்திராவிடர் மத்தியில் இருந்து வந்துள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆகையால் வரலாற்று ரீதியாக பார்க்கும் போது பொங்கல் பண்டிகை தொன்மை மிக்கது என்பது புலனாகிறது.

சூரிய வணக்கம் ஒரு காலத்தில் உலகெங்கும் இருந்து வந்துள்ளது. ஆனால் இப்போது இந்துக்கள் குறிப்பாக, தமிழர்கள் இத்தொன்மை வாய்ந்த சூரிய வணக்கத்தை பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சூரிய வணக்கத்தைச் செய்யும்போது நாம் இயற்கையையே வழிபடுகிறோம். உலகமெல்லாம் செழிக்கட்டும் என மனதார எண்ணிப் பொங்குகிறோம்,

ஔவையார் வரப்புயர என்றார். வரப்பு மட்டும் உயர்ந்தால் அரசனும், அவனது ஆட்சியும் சிறக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. வரப்புத்தான் அடிப்படை. அது போலவே இயற்கையை நேசிக்கும் மனப்பான்மையும், எல்லா வளமும் பொங்கட்டும் என்ற நல்லெண்ணமும் தான் நல்வாழ்வுக்கு அடிப்படை.

உலகமெல்லாம் உய்யட்டும் என்ற பெருநோக்குடன் கூடிய இயற்கை வழிபாடே பொங்கல் பெருநாளாகும். தமிழ் கூறும் நல்லுலகம் தைத் திங்கள் தோறும் பொங்கலைக் கொண்டாடி வருகிறது. மனிதனாகவே மேற்கொள்ளப்படும் பொருளாதார வளப் பெருக்கத்திற்கான கடின உழைப்பும், முயற்சியும் தரும் அறுவடையின் குறிப்பினை பொங்கல் திருநாள் விளக்கி நிற்கிறது.

விவசாயம் சம்பந்தமான அறுவடைகளே தைப்பொங்கலுடன் பெரிதும் தொடர்பு படுவனவாயினும், இன்று தைத்திங்கள் பிறக்கின்றதென்பதால் அரசியல் விடிவு, பொருளாதார சுதந்திரம், புதிய சமுதாயத் தோற்றம் என்பனவும் சிறப்புற்றமைய வேண்டுமென வழிபடும் சிறப்புமிகு நாளாகவும் அது மிளிர்கிறது.

சொந்த முயற்சியின் பலா பலனை நெஞ்சு குளிரக் கொண்டாடவரும் திருநாளே பொங்கல். அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவை விளைவிப்பதற்கு மனிதன் தனது உழைப்பெனும் ஆயுதம் கொண்டு பூமியுடன் போர் புரிகிறான். அந்த விளைவுப் போரினால் பெற்ற பெறுபேற்றினை நல்ல முறையில் தருவிக்க, முற்றுவிக்க உறுதுணை புரிந்த இயற்கையைக் கௌரவித்து வணங்கும் தினமே பொங்கல் திருநாள்.

தமிழரின் ஆண்டு மலர்வது சித்திரை மாதத்தில். ஆனால் அவர்களது உழைப்பின் பலன் தை மாதத்தில் நினைவு கூரப்படுகிறது. தை மாதம் இந்துக்களின், தமிழர்களின் வாழ்வில் ஒருவித புதுமலர்ச்சியை ஏற்படுத்தும் மாதமாகும். தை பிறந்ததும் எங்கள் அனைவருக்கும் ஒப்பில்லாத மகிழ்ச்சி பிறக்கிறது. அந்த மகிழ்ச்சி அனைவரது உள்ளத்திலும் நிலைக்க வேண்டும்.

தமிழீழ மக்கள் அடைந்து வரும் சொல்லொணாத் துன்பங்கள் அனைத்தும் நீங்கி பல்வகைச் சுதந்திரங்களும் மலர வேண்டுமென சூரிய பகவானையும், குல தெய்வங்களையும் இன்றைய தினம் வேண்டுவோமாக. ★

காவேரி யோகநாதன்

## மன அமைதி பெறுக

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் விடுத்த பொங்கல் வாழ்த்து வருமாறு:

தமிழ் ஈழ மக்கள் எல்லோரும் இன்னல்கள் நீங்கப் பெற்று, மன அமைதியுடன் இன்புற்று வாழ வேண்டுமென எமது உளமார்ந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் வழங்குகின்றோம்.

''பொங்கும் மங்களம் எங்கும் தங்குக''

## இறைவனைப் பணிவோம்!

இன்று தமிழர்கள் திருநாளான தைப்பொங்கல் தினமாகும்.

இப்புனித தினத்தில் நாம் மீண்டும் இறைவனை துதித்து நம் வாழ்க்கையை ஆரம்பிப்போமாக.

நாம் ஏன் இப்படி தொடர்ந்து பல இன்னல்களை அனுபவித்து வருகிறோம் என்று பலர் கேட்கிறார்கள். துன்பம் தான் மனிதனை உயிர்த் துடிப்புள்ளவனாக திகழ வழிவகுக்கின்றது.

குந்திதேவி மீளாத்துயரம் தனக்கு வரமாக அமைய பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் கேட்டார். ஆகவே நம் இனம் இறைவனை தொடர்ந்து பக்தியுடன் வழுத்தவேண்டும். இதுவே நாம் செய்யக்கூடிய தலையாய பணி, இப்பணியிலிருந்து நாம் என்ன நேரினும் பின்வாங்கக்கூடாது.

''பணியப் பணிய பாவம் அகலும்'' என்கிறது நற்சிந்தனை.

-சுவாமி சித்ருபானந்தா

# பொங்கல் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன. 15

★ யாழ்ப்பாணம் பட்டப் படிப்புகள் கல்லூரி வெளிவாரி மாணவர் ஒன்றியம் இன்று நண்பகல் 12 மணிக்கு பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறது, கவி அரங்கம், சிறப்புச் சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும்.

★ நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பொங்கல் கலைவிழா நடைபெறுகிறது. ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை வகிப்பார்.

★ நெல்லியடி சனசமூக நிலையத்தில் இன்று பொங்கல் விழா தலைவர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவின் போது இசை அரங்கும் பட்டிமன்றமும் இடம்பெறும்.

★ அராலி தெற்கு சின்ன சுதா விளையாட்டரங்கில் இன்று புதன் நண்பகல் 12 மணிக்கு உழவர் தேசிய விழா நடைபெறுகிறது. அராலி — மாவத்தை விளையாட்டுக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. கழகத் தலைவர் செல்வன் மு. ஜெகதீஸ்வரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

★ கிறிஸ்தவ கலை இலக்கிய இணையம், பொங்கல் விழாவை முன்னிட்டு நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் ஒலிபரப்பி மூலம் பா ஓதல் நிகழ்ச்சியை நடத்த உள்ளது. ஆட்சிச் செயலர் சிங்கராயர் தார்சீரியஸின் பொங்கல் செய்தியும் ஒலிபரப்பப்படும்.

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகம் பொங்கல் தினமான இன்று மாலை 4.00 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் பரிசுச் சீட்டிழுப்பு நடத்துகிறது.

★ திருமறைக் கலா மன்றம் பொங்கல் விழாவை தமிழ்த்தின விழாவாக இன்று கொண்டாடுகிறது. யாழ். பிரதான வீதி அலுவலகத்தில் காலையும், மாலையும் வைபவங்கள் நடைபெற உள்ளன. காலை சித்திரக் கண்காட்சி, பண்பாட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும், மாலை இசை நிகழ்ச்சிகளும் பட்டிமண்டபமும் இடம் பெறும்.

(இ)

SHAMROCK
கல்வி நிறுவனம்,
சுண்டிக்குளி.

A/L
கிறிஸ்தவம்
திருமதி ஜே. ஏ.
மல்லிகா B.A. (Hons)
93
இரட்சணிய வரலாறு
92
திருச்சபைச் சரித்திரம்
O/L டிச. 92 வகுப்புகள்
சனி, ஞாயிறு
நடைபெறுகின்றன
[19349]

புத்தாண்டு பொங்கல்
வாழ்த்து

திருவள்ளுவர் ஆண்டின் ஆரம்ப நாளான
இன்றைய தினத்தில்
தெய்வீகத் திருக்குறள் மன்றம் [Y. M. D. A.]
தமிழ் கூறும் நல்லுலகெங்கும் வாழும் மக்களுக்குத்
தமது நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

திருக்குறள் கூறும் —
அன்பு, அடக்கம், பொறை, அருள், அறிவு,
ஊக்கம், ஆள்வினை, பண்பு, நாண் ஆகிய
உடமைகளையும் வாழ்க்கையில் கடைப்பிடித்து
எங்கள் உடமையாக்க உறுதி கொள்வோம்.

நன்றி: எங்கள் பணிகள் சிறப்புடன் தொடர உற்சாகம் ஊட்டி ஆதரித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

ஏ. என். யோகநாதன்,
நிறுவனர்,
தெய்வீகத் திருக்குறள் மன்றம்,
Young Men's Divine Kural Association.
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(19333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Bantam கோழி முட்டைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (19341)

பல இன நல்ல வளர்ப்பு புறா அடைவைப்பதற்கு ஏற்ற பன்ரம். வெள்ளடியன் கோழி முட்டைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம் (கலட்டி ஒழுங்கை), சாந்தன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். [19331]

ஸ்ரான்லி வீதியில் இருக்கும் 100 ஆம் நம்பர் கடை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். இ. யோகலிங்கம், C/o சிவதர்சன், 394, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (19344)

### நாற்றுக்கள் விற்பனைக்கு

விளாத்தியில், நாரத்தையில் ஒட்டிய நல்ல இன தோடங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/1276)

### தேவை

யாழ். இந்து பெற்றோர், 28 வயது பொறியியலாளருக்கு (சிவில்) அழகிய பட்டதாரி மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்கள். [திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி] மிகவும் பொருந்தக் கூடியன. சகல விவரங்களுடன் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். 342, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [19347]

### திருத்துனர் தேவை

அனுபவமும், ஆற்றலும் உள்ள மணிக்கூடு திருத்துனர் தேவை. நேரில் வரவும். அல்டி 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1300]

### கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தனின் ஆக்கங்களான 'கணிதம் உதவி நூல் வரிசைகள்' விற்பனையாகின்றன. மடக்கை, விருத்திகள், திரிகோணகணிதம், புள்ளிவிபரவியல் ஒவ்வொன்றும் பயிற்சி வினாக்களும், செய்கைகளும் அடங்கியவை. ரூபா 20/- பூபாலசிங்கம் மற்றும் புத்தகசாலைகளில். [4486]

### கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடம் உட்பட A/L வரை சகல பாடங்களும் குறைந்த காலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [5004]

### சிறுவர் பாடசாலை

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆரம்பம்: 6-1-1992 விண்ணப்பப் படிவங்களை றிம்மர் மண்டபம், வேம்படி வீதியிலும், கில்னர்மண்டபம், வண்ணார் பண்ணையிலும் பெற்றுக்கொள்ளலாம். [சி/1323]

### அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள், குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கு அருகாமை] [சி/1284]

### புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோக ராகம். இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரம் ஒன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது. (19270]

### விடுகதைத் தொகுப்பு

''நொடியும் விடையும்'' விடுகதைத் தொகுப்பின் மூன்று பாகங்களும் இப்பொழுது விற்பன்னயாகின்றன. எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். ரூபா ஆயிரம் பரிசுப் போட்டியும் உண்டு. ஆசிரியர்: கோப்பாய் சிவம். [19288]

### சோதிட நூல்கள்

புத்தாண்டுப் டலன்கள், செவ்வாய் மாற்றம், கருணைக்கடல் பாபா, நடமாடும் மனித தெய்வம் ஸ்ரீ சத்யசாயி பாபா, முற்பிறவி, அற்புத வரலாறுகள் கிடைக்குமிடம்: ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். தயாளன் விவசாய மருந்தகம், கோண்டாவில் கிழக்கு. நூல்களின் ஆசிரியர்: Prof, சத்தியதாஸன், சித்தன் கேணி. [19307]

### வரலாறு

விற்பனையாகின்றது! சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வரலாறு- ஆண்டு 11, வரலாறு- ஆண்டு 6 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டது. ஆக்கியோன்: ந. தர்மபாலன் [சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்] [19244]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### நேரமாற்றம்

எனது ஆஸ்மா [தொய்வு- முட்டு] வைத்திய நிலையத்தில் பழைய நோயாளர்களை மட்டும் பார்வையிடுதல், மருந்து கொடுத்தல் ஞாயிற்றுக்கிழமை தவிர காலை 9 - 12 மணிவரையும்; மாலை 4 - 6 மணிவரையும் நடைபெறும். டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் [ஆஸ்மா சிகிச்சைநிபுணர்], 33, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [19308]

### ஆசிரியர் பயிற்சி

பரி. பேதுரு சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்: 15-1-1992 ஒரு வருட பயிற்சி. O/L பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்கள் கில்னர் மண்டபம், வண்ணார் பண்ணையில் பெற்றுக்கொள்ளலாம். [சி/1322]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### வெளிவந்து விட்டது

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை, கணக்கியல் உ. த. [9 வருடம்] வினா- விடை வெளிவந்து விட்டன. பெற்றுக் கொள்ளும் இடங்கள்: அறிவகம் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி. சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி/1285]

### புலமைப் பரிசில்

ஆண்டு 6 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் [தமிழ், கணிதம்], 19 - 01 - 91 ஆண்டு 5 [தமிழ், கணிதம், ஆங்கிலம்], 26 - 01 - 91 ஆண்டு 4 [தமிழ், கணிதம், ஆங்கிலம்] 2- 2 - 91 ஞாயிறும் வெளியிடப்படும். பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19340]

### வகுப்புகள்

1972 - 73 ஆம் ஆண்டுகளுக்கான மனைப் பொருளியல் வகுப்புகளும், விரைவில் நடைபெறவிருக்கும் G.C.E. [A/L] 1991 ஆம் ஆண்டிற்கான வினா- விடை வகுப்புகளும் நடைபெறுகின்றன. விவரங்களுக்கு: இல: 88, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். [19275]

---

## புதிய உயர் கல்லூரி

**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

**ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை**

பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:

**18-01-1992**

2 மணி

ஆசிரியர்:

**அ. குமாரவேல்**

[சி-1294]

---

## கம்பியூட்டர் புறோகிறாமிங்

## BASIC மொழி

4 மாதகால கற்கை நெறி

**ஆரம்பம்:**

வார இறுதி - **18 — 01 — 1992**

வார நாட்கள் - **27 — 01 — 1992**

**I. B M. [Compatibles] Commodore 64**

ஆகிய கணணிகளில் செய்முறைப் பயிற்சி

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3ஆம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம். [illegible]

---

# நன்றி நவிலல்

அமரர்

## கந்தலிங்கம் சதீஸ்குமார்

[மருத்துவபீட நான்காம் ஆண்டு மாணவன்]

09 - 01 - 1992 இல் நடைபெற்ற அமரர் கந்தலிங்கம் சதீஸ்குமாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு, எமது ஆறாத்துயரிலும் பங்கு கொண்ட யாழ். மருத்துவபீட விரிவுரையாளர்கள், மருத்துவபீட மாணவர்கள், விசேஷமாக நான்காம் ஆண்டு மாணவர்கள், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள், மரணவிசாரணை அதிகாரி, தமிழீழக் காவல் துறையினர் மற்றும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட சகல மருத்துவபீட மாணவர்கள், மண்டைதீவு இந்து இளைஞர் மன்றத்தினர், வேண்டிய உதவிகளைச் செய்த அயலவர்கள், உற்றார், உறவினர்கள், அருமை நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:

**கந்தலிங்கம் குடும்பத்தினர்.**

23, யாழ், வீதி,
யாழ்ப்பாணம். [19335]

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:

**28- 11- 1971**

இறைவன் அடியில்:

**17- 01- 1989**

அமரர்

## பூலிங்கம் தாஸ்நிதி (தாஸ்)

''ஆண்டு மூன்று கழிந்ததையா
இறைவன் பாதம் நீ சென்றாலும்
நூறு ஆண்டுகள் கழிந்தாலும்
உன் அன்பு எங்களை வாட்டுதையா.''

உமது நினைவுகள் நிதர்சனமாய் எம் நெஞ்சில் நீங்காது நித்தமும் பிரகாசிக்கும்.

உங்கள் பிரிவால் வாடும்:

**அம்மா, அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார், மருமகன், உற்றார், உறவினர்கள்.**

பூவில்லம்.
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (19 346)

---

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு: **16 — 09 — 1969**

இறப்பு: **15 — 07 — 1991**

## அந்தோனிப்பிள்ளை அல்போன்ஸ் குணரட்ணம்

(பலாலி வடக்கு)

அன்பு மகனே! உன்னைப் பிரிந்து ஆறு மாதங்கள் என்ன அறுநூறு மாதங்கள் சென்றாலும் உன் நினைவு எமைவிட்டகலாது.

இவரின் பிரிவால் துயருறும்:

**பெற்றோர், சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக தும்பளை புனித மரியாள் தேவாலயத்தில் 16-01-1992 மாலை 4-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (19325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "A" LEVEL CENTRE
**உயர்தராதர கல்வி நிலையம்,**

பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை,
[யாழ். ஆஸ்பத்திரி கிழக்கே]
யாழ்ப்பாணம்.

**93 BATCH ஔியியல்**

**ஆரம்பம்: 18 - 01 - 1992 Sat. 8-45**

● Sat. & Sun. 8-45 — 9-45 ●

ஆசிரியர்: திரு. பத்மநாதன்
[B.Sc. (Hons), Dip. in - Ed.]

[சி-1331]


## 130 ஆவது ஜயந்தி

கொழும்பு, ஜன. 15

சுவாமி விவேகானந்தரின் 130 ஆவது ஜயந்தி இம் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும்.

இராமகிருஷ்ண மடத்து பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுகானந்தஜி மகராஜ் விழாவுக்கு தலைமை வகிப்பார். இவர் கல்கத்தாவிலிருந்து கொழும்பு வருகிறார்.

[இ-எ]


## கம்பியூட்டர் வகுப்புக்கள்

★ *Diploma in data processing and BASIC Programming*

பிரிவு - 1 PROJECT, FILE HANDLING உட்பட விரிவான பயிற்சி நெறி

பிரிவு - 2 BASIC PROGRAMMING ONLY

PASCAL வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
(மாணவர் பதிவு நடைபெறுகின்றது)

தமிழ் விளக்கங்களுடன்- சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

உங்கள் கணனி [Computer] அறிவை வளர்த்திட C. S. A. ஆரம்பம்.

**COMPUTER SCIENCE ACADEMY**

18-1-92 10 மணி
கரந்தன் விதி,
நீர்வேலி.

19-1-92 3 மணி
நாவலடி லேன்,
திருநெல்வேலி.

[19332]



## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கு பதிவு செய்தல்
**கல்வியாண்டு - 1992/93**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப் பாடநெறிகளுக்கு பதிவுசெய்ய விரும்புபவர்கள் 31 - 01 - 1992 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பாடநெறிகள்:

கலை முதற்தேர்வு G. A. Q,
விஞ்ஞான முதற்தேர்வு G. S. Q.

க. பொ. த உயர் தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[19326]



## வாணி கல்வி நிறுவனம்
வடலியடைப்பு.

ஆண்டு 11, 10, 9
வர்த்தகம்

★ குகதாசன் ★

ஆரம்பம்:
16 — 01 — 1992
வியாழன் 4-00 மணி

[19351]



★ உங்கள் வாழ்வு வளம் பெற

★ பொருளாதார மேம்பாடு அடைய

★ உறுதியாகச் சேமிக்க

★ தாராள நன்கொடைகள் பெற

★ அங்கத்துவச் சலுகைகள் அனுபவிக்க

மக்கள் சேவையே மகேசன் சேவையெனப் பணி புரிந்து வரும்

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தின்

மக்கள் சேவைப் பகுதி, வங்கிப் பகுதி அனைத்தினதும்

மங்கள

## பொங்கல் வாழ்த்துக்கள்

★ அதன் பல்லாயிரம் அங்கத்தவர்களுக்கும் உரித்தாகின்றன ★

தங்கத் தமிழினம் தரணியில் உயர்ந்திட
சொந்த மண்ணில் தலை நிமிர்ந்து நடந்திட
மக்கள் மனங்கள் பூரிப்பு அடைந்திட
தைப் பிறப்பில் வழி பிறந்திட

பால் மணக்கும் புத்தரிசிப்
**பொங்கலே பொங்கு!**

நீங்களும் உங்கள் இளம் தளிர்களும் வளத்துடன் வாழ நாம் திட்டங்கள் தீட்டுகின்றோம், நன்கொடைகள் வழங்குகின்றோம்

சேர்ந்து 1 வருட காலத்தின் பின் உரிமைகள் பெறலாம்

ஒரு வருடப் பணத்தை ஒரே தடவையில் கட்டுபவர்களுக்கு ஒரு மாதப் பணம் அவர்கள் சேமிப்பிற்கு நன்கொடையாக வைப்பிலிடப்படுகின்றது.

◎ **நன்கொடைகள்:** ருது, திருமணம், முதிர்ச்சி சகாயம், அந்தியகாலம்

★ **சேவைகள்:** கைமாற்றுக் கடன், குறுகிய காலக் கடன், நீண்டகாலக் கடன், உயர்கல்விக் கடன், உண்டியல் மாற்றம், அடகு

● **திட்டங்கள்:** சேமிப்பு, நிலையான வைப்பு, 5 வருட நன்கொடை வைப்பு

**மாத வட்டி 16% வருட வட்டி 18%**

பிரவேசம் 120.00 பங்குப் பணம் 25.00 மாதாந்தம் 20.00

செ. இ. ஆனந்தராசா,
பொது முகாமையாளர்.

கே. எஸ். அருளானந்தர்,
தலைவர்.

தொடர்பு கொள்க:

பொது முகாமையாளர்,
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிட்டெட்,
தபால் கந்தோரடி,
வட்டுக்கோட்டை.

[சி-1287]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கருவில்; 13 — 02 — 1970

கல்லறையில்: 25 — 01 — 1991

**சண்முகரெத்தினம் சக்திபாலன்**
**( விக்ரம் )**

[ யாழ் இந்துவின் பழைய மாணவனும், பொறியியல் பீடத்திற்குத் தெரிவானவரும் ]

முற்றத்து நிலவில்
முத்தமிட்டு,
முத்தமிட்டு - உனக்கு
அமுதூட்டும் பொழுது
கண்டேன் -
ஒரு கனவு

நாளாக...... நாளாக
ஆளாக வருவாய்
ஒரு ராஜ்ஜியத்தை
ஆளவென்று ......
யாவையும்
பூச்சியமாக்கி......!

சக்தியை இழந்து
சக்கையாய் நானிங்கு,
திக்குகள் எங்கும்
உன்முகம் காண,
நிஜத்தைத் தேடி
நிம்[ன்] மதியிழந்து,
உதடுகள்
மௌனமாய் ......
உள்ளமோ
ஓலமாய் ......!!

ஆற்றொணாத் துயரில் துடிக்கும்,
தாயார்.

விதானை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[19...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்,

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்,

[A/L கலை, வர்த்தக வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**93 பிரிவு - 2**
**ஆரம்பம்: 19-1-1992**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகவியல் — திரு. தேவராஜா
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
அளவையியல் — திரு. சுப்பிரமணியம்
இ. நாகரிகம்
இ. சமயம் } — திரு. காரை. சுந்தரம்பிள்ளை
தமிழ் — திரு. குழந்தைவேல்
புவியியல் — திரு. குணராஜா
அரசியல் — திரு. சீலன்
வரலாறு —

மு. குறிப்பு: அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி/1289]



# "கலக்சி புகைப்பட சேவை" யின் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

**AGFA** கலர் படச்சுருள்கள்

புகைப்படக் கலைஞர்களே!

★ குறைந்த விலையில்
★ நம்பகமான கலர்ப்படச் சுருள்களை
★ மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள:

**கலக்சி புகைப்பட சேவை**

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[19353]



# நியூ விக்ரேஸ்

புதிய ரக எலெக்ரோனிக் கமெரா, எலெக்ரோனிக் கைக்கடிகாரங்கள் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மற்றும் வீடியோ டெக், T. V., றேடியோ, எமெஜன்சி பற்றறிகள் யாவும் புதிய முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

★ எங்கள் சேவைகள் கிழமை நாட்களில் தொடர்ந்து நடைபெறுகின்றன. ★

● உங்கள் தேவைகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். ●

★ **நியூ விக்ரேஸ்** ★

23, B. M. C. ஒழுங்கை,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[5003]



# அமைதி பொங்கிட, இன்பம் பொங்கிட, என்றும் மங்களம் தங்கிட வாழ்த்துகிறோம்

உங்கள் பாத்திரங்கள் எவையானாலும் பளிச்சிட, துலங்கிட

**நிம்**

உள்ளூர் இயற்கை வளம்கொண்டு உங்களுக்கென தயாரிக்கப்படுவது.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

[சி-1330]


## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 15

திரு. மு. திருநாவுக்கரசு எழுதிய ''இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்'' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

(இ)


# புதிய உயர் கல்லூரி
(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L - 93 புதிய பிரிவு**

ஆரம்பம்:
18 - 01 - 1992
[7-00 மணி]

பொருளியல் — லோகசிங்கம்
வர்த்தகம் — தேவா
கணக்கியல் — யோகராஜா
அளவையியல் — மகேந்திரன்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — மீரா
புவியியல் — குணராஜா
அரசியல் — கியூபேட்
வரலாறு — அருள்நங்கை
கிறிஸ்தவம் — அருட்சகோதரர்

(சி-1297)



# C. C. A
கலை, வர்த்தக கல்லூரி

**G. C. E. A/L - 93 புதிய பிரிவு III**

பொருளியல் — உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — இரட்ணம்
அளவையியல் — சயந்தன்
இ. நாகரிகம் — ஜோதீஸ்வரன்
தமிழ் — குழந்தை
அரசியல் — பஞ்சாட்சரம்
புவியியல் — வேலாயுதபிள்ளை
வரலாறு — வேலா
கிறிஸ்தவம் — கொலின்ஸ்

**ஆரம்பம்:**
**18-01-1992**
காலை 8-00 மணி

குறிப்பு:
G. C. E. A/L - 92
வர்த்தகமும் — நிதியும்
பகுதி இரண்டு
வினா-விடை வகுப்பு
சனி 6 ⟶ 7
ஞாயிறு 6 ⟶ 7

ஆரம்பம்:
18 - 01 - 1992

[சி-1333]



# முக்கிய அறிவித்தல்

அசல் ஆர். வி. ஜி பீடிகளைப் போல் ஒரு சில பேர்கள் தரத்திலும் விலையிலும் குறைந்த போலி ஆர். வி. ஜி பீடிகளை விற்பனை செய்வதாக எமக்கு அறியவந்துள்ளது. அசல் ஆர். வி. ஜி பீடியின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை.

குறைந்த விலையில் போலி ஆர். வி. ஜி பீடி விற்பனை செய்பவர்களை இனம் கண்டு எமக்குத் தகவல் தருமாறு பீடி விற்பனையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம். இது தொடர்பாக தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும்.

**ஆர். வி.ஜி நிர்வாகம்.**
58, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(19273)


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-02-28 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் - பேராசிரியர்
2. நோயியல் பேராசிரியர்
3. மருத்துவப் - பேராசிரியர்
4. மனநோயியல் - பேராசிரியர்
5. குழந்தை மருத்துவப்- பேராசிரியர்
6. அங்கக்கோணல் - அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
7. கழலையியல் அறக்கொடைத் தவிசு
8. விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11-உடற்றொழிலியல் /சமுதாய மருத்துவம்/ சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் /நோயியல் / மருந்தியல் / மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/குழந்தை மருத்துவம்/மனநோய் மருத்துவம் / அறுவை மருத்துவம்
9. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல்/சமுதாய மருத்துவம் / சட்டமருத்துவம் / நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்/ நோயியல் /மருந்தியல்/ மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ மனநோய் மருத்துவம்/ அறுவை மருத்துவம்.
12. கிளினிக்குக்குரிய உள நோய் வல்லுநர்

**சம்பள அளவுத்திட்டம்:**

பேராசிரியர் தரம் 11:
ரூபா 12,200-6 x 300- 14,000 மாதமொன்றுக்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11:
ரூபா 8,000 - 5 x 250 - 9,250/- மாதமொன்றுக்கு

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 4,500 - 10 x 200- 6,500/- (மாதமொன்றுக்கு.
(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும். அதாவது 4,900/- சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 4,900/- மாதமொன்றுக்கு

கிளினிக்குக்குரிய உளநோய் வல்லுநர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு.
(ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500 - 10 x 200- 6,500/- மாதமொன்றுக்கு சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/-சம்பளப்படியில்வைப்பார்.)

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர், விண்ணப்ப படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுக வரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

**குறிப்பு:**

பேராசிரியர்கள், அறக்கொடைத் தவிசுகள் ஆகிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

**- பதிவாளர்.**

யாழ்ப்பாணம் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-10

[சி-1329]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பொங்கல் மந்திரம்

இன்று தைத் திருநாள் உழவர்களின் உன்னத நாள். தைப்பொங்கல் நன்னாள். தமிழ் மக்களின் விவசாயக் கலாசாரத்தை எடுத்தியம்பும் சிறப்புடை நாள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, அவை சிறக்க உதவிய சூரிய பகவானுக்கும், பக்கத் துணையாக விளங்கிய பட்டிகளுக்கும் அடுத்தடுத்துப் பொங்கலிட்டு, நன்றி செலுத்தி, அவற்றை வாழ்த்தி வணங்கும் பண்டைத் தமிழர் பண்பாட்டின் ஒரு பொங்கும் சின்னமாக விளங்கும் நாள்.

மண் மாதா மனம் பூரித்து மழையின் உதவியுடன், பகலவனின் துணையுடன் மடி பொலிந்ததால் விளைந்த செந்நெல், மக்கள் வயிறுகளை நிரப்பி, அவர்களுக்கு மன மகிழ்ச்சி தருகிறது; வாழ்வை வளம் பெற வைத்து மன நிறைவை உண்டாக்குகிறது. அந்த மன நிறைவையும் பொங்கல்நாள் பிரதிபலிக்கிறது.

மனித வாழ்வுக்கு உணவு இன்றியமையாதது. அதனைக் கடும் உழைப்பு நல்கி உற்பத்தி செய்யவேண்டும். உணவும் ஏனைய பொருள்களும் கிடைக்கப் பொருளாதாரம் ஓங்க வேண்டும். வளங்களை இனங் கண்டு அவற்றைப் பெருக்க வேண்டும் பொருளாதாரத்தின் சிறப்பையும் உழைப்பின் மகத்துவத்தையும் உணர்த்தும் பெருநாளாகவும் தைப்பொங்கல் திருநாள் மிளிர்கிறது.

பசும்பாலும், செந்நெல்லும், சர்க்கரையும், கன்னலின் சாறும், நறுந்தேனும், நெய்யும் சேர்த்துப் புதுப்பானையில் பொங்கலிட்டு எதிர்வரும் ஆண்டு மங்களமாக, சிறப்பாக அமைய வேண்டும் என விழையும் மனித மனத்தின் ஆவல் பொங்கல் சடங்காகப் பரிணமித்தது. அதுவே தைபிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை.

அரசியல், பொருளாதாரத் துறைகளில் விடிவு காண விரும்பும் ஈழத்தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் திருநாள் பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்தும் நாளாக அமைவதே சிறப்பும் பயனுடைத்துமாகும்.

தன் கையே தனக்கு உதவி என்ற உண்மையை ஈழத் தமிழ் மக்கள் உணரத் தொடங்கி உள்ளனர். அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடை எமது சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை இடித்துரைக்கிறது.

தங்கள் பொருளாதாரத் தளத்தை வலிமையும், உறுதியும் கொண்டதாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நோக்கி ஈழத் தமிழர்கள் நடைபோடுவது மிகவும் அவசியமானது.

ஈழத்தமிழ் மண்ணின் வளம் கொழிக்கும் பூமிகள் சுவீகரம் செய்யப்படுகின்றன. குண்டு வீச்சு மற்றும் காடழிப்பினால் எஞ்சிய நிலங்களின் உற்பத்தி வீரியம் சிதைக்கப்படுகிறது. கழனிகள் காடுகளாக மாறுகின்றன.

எனினும் மனம் சோராமல் விவசாயத்தைப் பெருக்கப் புதிய வழிகளையும், தொழில் முறைகளையும், மாற்றுத் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்தி கடுமையாக உழைப்போமாக. உழைப்பு எனும் ஆயுதம் கொண்டு ஏற்கனவே ஆரம்பித்த உற்பத்திப் போர் தடங்கலின்றித் தொடரட்டும்.

எங்கள் கையால் உழுது எங்கள் உணவைப் பெறுவோம் - என்பதே இன்றைய தைப்பொங்கல் தாரக மந்திரமாக அமையட்டும். அதனை நாடியே அடுத்த தை முதல் நாள் வரை உழைக்கவும் செயற்படவும் திடசங்கற்பம் பூணுவோமாக!

## தச்சன்காட்டில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 15

தச்சன்காட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை 6 மணியளவில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. [உ-15]

## சைக்கிளால் விழுந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 15

சைக்கிளில் இருந்து தவறி விழுந்ததால் தலையில் காயமடைந்த நிலையில் கடந்த சனியன்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று இரவு அங்கு மரணமானார். உரும்பராயைச் சேர்ந்த பி. தவராசா [வயது 40] என்பவரே இறந்தவர் ஆவார். (உ-15)

# போலி ஆசிரியர்கள்; டாக்டர்களால் கல்வி, சுகாதாரத்திற்கு பெருங்கேடு!

கொழும்பு, ஜன. 13

ஆசிரியர்கள் தனிப்பட நடத்தும் வகுப்புகளும், வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்திவரும் வைத்திய சிகிச்சைகளும் நாட்டின் கல்விக்கும், நாட்டு மக்களின் சுகாதாரத்திற்கும் பெரும் தடைகளாக இருந்து வருகின்றன.

கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் இடம் பெறும் துஷ்பிரயோகம் சம்பந்தமாக ஆராய்ந்த தேசியக் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு வழங்கிய தங்களது அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த அதிக ஆசிரியர்கள் வகுப்பு நேரத்தில் பாடங்களைப் போதிப்பதில் எவ்வித கவனத்தையும் செலுத்துவதில்லை என்று இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலாக வார இறுதிகளில் இந்த ஆசிரியர்களினால் ஒழுங்கு செய்யப்படும் தனிப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

நாடெங்கும் 6 ஆயிரம் தனிப்பட்ட போதனாசிரியர்கள் சொந்த முறையில் விளம்பரம் செய்து டியூசன் வகுப்புகளை நடத்தி வருகின்றார்கள் என்றும் —

இவர்களுக்கு எந்தவித அடிப்படைக் கல்வித் தராதரமும் இல்லை என்றும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய பதவியைப் பெறுவதற்கு எத்தகைய தகுதியையும் இவர்கள் கொண்டிருக்கவில்லை.

இவ்வருட ஜி. சீ. ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளுக்கான கேள்விகளுக்கு டியூஷன் மாஸ்டர்கள் பதிலளிப்பார்கள் என்ற வகையில் நகரங்களிலும், பட்டினங்களிலும், கிராமங்களிலும் கடந்த மூன்று வாரங்களாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலீஸாரும், மாகாண சபை அதிகாரிகளும் இவ்விசாரணைக்கு உதவ உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வைத்திய சேவை பற்றி கருத்து வெளியிட்ட இந்தக் குழுவினர் —

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவிதத் தகுதி கொண்டிராதவர்களும் கொழும்பில் உள்ள மருந்துக் கடைகளில் மருந்துக் கலவையாளர்களாகக் கடமையாற்றியவர்களும், போலி டாக்டர்களாக தூர இடங்களிலுள்ள கிராமங்களில் சேவையாற்றி வருவதை கண்டுபிடித்துள்ளனர்.

அரசாங்கப் பதிவுபெற்ற வைத்தியர்கள் என்று இவர்கள் தங்களது பெயர்ப்பலகைகளிலும் துணிவாக விளம்பரம் செய்துள்ளனர் என்று இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருபது லட்ச ரூபா செலவில் நாவற்குழியில் உப்பளம்!

இருபது லட்சம் ரூபா செலவில் நாவற்குழியில் உப்பளம் ஒன்றை அமைக்க யாழ். செயலகம் திட்டமிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ். செயலகத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் இந்தத் திட்டம் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் சகல திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கிடைக்கும் நிதியில் இருந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. [உ-3-5]

# ஷெல் தாக்குதல்களை நிறுத்தக்கோரி மகஜர்

மூளாயில் குடிமக்கள் வாழும் பகுதிகளில் அடிக்கடி இடம் பெறும் ஷெல் வீச்சுக்களை சண்டித்து நேற்று யாழ். அரச அதிபரிடமும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

நூற்றுக்கும் மேற்பட்ட மூளாய் மக்கள் கையொப்பமிட்ட இந்த மகஜர்களை மூளாய் மக்கள் சார்பாக திரு. இ. த. இராமச்சந்திரன் கையளித்தார்.

படையினரால் நடத்தப்படும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை நிறுத்தும்படி ஜனாதிபதியைக் கோருமாறு இந்த மகஜர்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [இ]

## தடுத்து ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 10 மணியளவில் குருநகர் சென். றோக் மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான பேரணி சென். பற்றிக்ஸ் வீதி, பிரதான வீதி, வழியாகச் சென்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பணி மனையைச் சென்றடைந்தது. அங்கு வைத்து இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

பின்னர் பேரணி யாழ். செயலகத்தை அடைந்தது.

அங்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மகஜர்களைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்புத்துறை சென். ஜோசவ், பாஷையூர் சென். அந்தனீஸ், குருநகர் சென். ஜேம்ஸ், குருநகர் சென். றோக் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆர்ப்பாட்டப் பேரணியில் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொண்டனர்.

[அ-5-51-15-30]

## மக்கள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்படுகிறது.

இதேவேளை—

காங்கேசன் துறையில் இருந்து குடாநாட்டுக்கு உணவுப்பொருள்களை எடுத்துவருவது தொடர்பாகவும் அவர்கள் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

தீவுப்பகுதியில் சிக்கியுள்ளவர்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைக் குழு அங்கு விஜயம் செய்வதன் தேவை குறித்தும் இன்றைய சந்திப்பின்போது ஆராயப்பட விருப்பதாக அறியவந்தது.

## மருந்து.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாவது:-

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் கிராமப் புறங்களில் சுதேச வைத்தியர்களின் சேவையினால் தான் மக்கள் நோயிலிருந்து விடுபடுகின்றார்கள். அவர்களது சேவை இல்லாவிடின் சுகாதார நிலை மேலும் மோசமடைந்திருக்கும்.

எந்த வைத்தியனாக இருந்தாலும் தான் கொடுக்கும் மருந்தின் தன்மையையும், செய்கையையும், பக்கவிளைவுகளையும் அறிந்து வைத்தியத்தைச் செய்வானாகில் அதில் எந்தவிதத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

மேலைத்தேச வைத்தியர்கள் உள்ளகப் பயிற்சிக்கு யாழ்ப்பாணம் வர மறுக்கும் இவ்வேளையிலும் சுதேசவைத்தியர்கள் யாழ்ப்பாணத்தில் கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றுகிறார்கள்.

மருந்து கண்டுபிடிப்பவர்களோ, மருந்து செய்பவர்களோ யார் யார் எதனைப் பாவிக்கவேண்டும் என ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை. ஆகவே தற்போதைய நிலையில் மக்களைக் குழப்ப நிலைக்கு தள்ளி அவர்களுக்கு உளத்தாக்கங்களை ஏற்படுத்த வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## ★ யாழ். ஆஸ்பத்திரிக்கு

# புதிய ஜெனரேட்டர் வந்தும் மின் விநியோகம் சீராகாது!

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய ஜெனரேட்டர் வந்து சேர்ந்துள்ளபோதிலும் ஆஸ்பத்திரிக்கு தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவே மின்சாரம் வழங்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

55 கே. டபிள்யூ. ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப் போதுமான மின் இணைப்புகளே தற்போது ஆஸ்பத்திரியில் உள்ளன.

கூடியளவு மின்சாரத்தை வழங்குவதற்கு வலு தாங்கக் கூடிய மின் இணைப்புகள் தேவை. அத்தகைய மின் இணைப்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான வயர் மற்றும் மின் உபகரணங்கள் தற்போது கொள்வனவு செய்ய முடியாதிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் புதிய ஜெனரேட்டர் மூலமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மின்சாரமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

# மூதூர் தமிழர் இடம்பெயர்வு

மூதூர் மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்கள் படையினரால் தொடர்ந்து சுற்றி வளைக்கப்படுவதால், தமிழ் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக படையினரின் சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும்—

படையினர் நடவடிக்கைகளை அடுத்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து செல்ல, அவர்களின் வீடுகளை படையினர் கொள்ளையிட்டு தீவைத்து எரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# சாம் தம்பிமுத்து கொலைக்கு உதவிய நபரே கைதாம்!

கொழும்பு, ஜன. 15

மட்டக்களப்பு முன்னாள் எம். பி. சாம் தம்பிமுத்து கொலைச் சம்பவம் தொடர்பாக பதுளையில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞரான — விஞ்ஞானப் பட்டதாரி — கண்ணன் புல்லுமலையைச் சேர்ந்தவர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கண்ணன், பொபி, சுரேந்திரராஜா என்று பல பெயர்களில் இவர் நடமாடி வந்தார் என்றும் —

பல மாதங்களாக பதுளைப் பகுதியில் தங்கியிருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

சாம் தம்பிமுத்துவைச் சுட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடுவதற்கு இவரே உதவினார் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாம்.

இவர் தற்சமயம் இரகசியப் பொலீஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். [உ-எ]

## பாக். வசம் அணுசக்தி ஆயுதங்கள்

வாஷிங்டன், ஜன. 15

பாகிஸ்தானிடம் தற்சமயம் பதினைந்து அணு ஆயுதங்கள் இருப்பதாக மேற்குலக நிபுணர்கள் தெரிவித்தனர் என்று இந்திய வானொலி அறிவித்தது. (உ-எ)

## வத்திக்கான் அங்கீகாரம்

ரோம், ஜன. 15

யூகோஸ்லேவியா சமஷ்டி அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற குறோசியா, ஸ்லோவேனியா ஆகிய குடியரசுகளை தனிநாடுகளாக வத்திக்கான் அறிவித்துள்ளது. [இ-எ]

## மூதூர் கோயிலில் முகாம்

யாழ்ப்பாணம், ஜன. 15

மூதூர் பத்திரகாளி அம்மன் கோவில் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் நேற்றுமுன்தினம் முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமை பதவிக்கு சோனியா!

## பிரியங்காவுக்கும் முக்கிய இடம் வழங்க முயற்சி

புதுடில்லி, ஜன. 15
இந்தியாவில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக மறைந்த ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியா காந்தியைத் தெரிவு செய்யும் முயற்சிக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதுடில்லியிலிருந்து வெளியாகும் ''ட்ரிபியூன்'' பத்திரிகை நேற்று இச்செய்தியை வெளியிட்டது.

ஒருவருக்கு ஒரு பதவி என்ற திட்டத்தின் கீழ் பிரதமர் பதவியை திரு. நரசிம்மராவ் வகிக்கும் அதேவேளை, காங்கிரஸ் தலைவர் பதவிக்கு திருமதி சோனியா காந்தி தெரிவு செய்யப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளதாம்.

காங்கிரஸ் தலைவர் பதவியையும் திரு. நரசிம்மராவே தற்போது வகித்து வருகின்றார் என்பது தெரிந்ததே.

இதற்கிடையில்—

ராஜீவின் புதல்வியான பிரியங்காவின் பெயர் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் முக்கிய பதவிக்கு பிரேரிக்கப்பட்டதாகவும்—

ஆனால் அந்தப் பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆக்ராவில் உள்ள காங்கிரஸ் கிளை பிரியங்காவின் பெயரைச் சிபார்சு செய்திருந்தது. ஆனால் படிப்பைத் தொடரவேண்டியிருப்பதால் தாம் இப்பதவியை ஏற்க முடியாதிருப்பதாக பிரியங்கா தெரிவித்து விட்டார்.

(உ-எ)

## திருமலையில் வீடுகள் அடிக்கடி சோதனை!

திருகோணமலையில் உள்ள சகல வீடுகளும் ஐந்து தினங்களுக்கு ஒரு தடவை ஆயுதப் படையினரால் சோதனையிடப்படுகின்றன. அனுமதி இன்றி வீடுகளில் தங்கி இருப்போர் கைது செய்யப்படுகின்றனர்.

திருகோணமலையில் உள்ள 27 அகதி முகாம்களில் 5 ஆயிரம் அகதிகள் வரை தங்கி உள்ளனர் என்றும் அசம்பாவிதங்களினால் சுமார் 40 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ)


கலைவண்ணம் மிளிரும் கவர்ச்சியான
அச்சு வேலைகளைச் செய்வதற்கு
விரும்புகிறீர்களா ?
தாமதியாது எங்களிடம் வாருங்கள்

★ நாவல்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நினைவு மலர்கள்
★ பில் புத்தகங்கள்
★ பரீட்சை வினாத்தாள்கள்

இன்னும் இவை போன்ற உங்கள் ஓடர்களை
உரிய நேரத்தில் சிறந்த முறையில்
அச்சிட நாடுங்கள்

உதயன்

292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.


## இலவச தமிழ் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18
தமிழ்த் தாய் மன்றத்தினரால் இலவசமாக நடத்தப்படும் ''தமிழ்ப் பயிற்சி வகுப்பு'' இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாக உள்ளது.

[இ]

## பெண் காயம்

தென்மராட்சி, ஜன. 15
மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில் காயம் அடைந்த பெண் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் எழுதுமட்டுவாளில் இடம்பெற்ற இந்த விபத்தில் சைக்கிளில் வந்த தவமணி [வயது 20] என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

விபத்து இடம்பெற்ற சமயம் ஹெலி ஒன்று அப்பகுதியில் பறந்தது என்றும் அப்பொழுது ஏற்பட்ட பதற்றமே விபத்துக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-117]

## இரு போராளிகள் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 15
முல்லைத்தீவு – முத்தையன்கட்டு குளத்தில் படகில் பயணம் செய்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் படகு மூழ்கியதால் மரணமானார்கள்.

பரந்தாமன் [சின்னையா புஷ்பராசா – மாங்குளம்], சுகுணன் [திருநாவுக்கரசு சதீஸ்-ஒட்டிசுட்டான்] ஆகிய இரு போராளிகளே மரணமானார்கள்.

## கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் கலை நிகழ்ச்சி

பொங்கல் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் இன்று இரவு 7.00 மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலை அரங்கில் மாபெரும் கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்துகிறது.

பொன். கணேசமூர்த்தியின் ''சந்தனக்காடு'' நாடகம், சாந்தன் இசைக் குழுவினரின் ''போர்க்கால ராகங்கள்'' இசை நிகழ்ச்சி என்பன இன்றைய கலை நிகழ்ச்சியில் முக்கிய இடம்பெறுகின்றன.

கலை நிகழ்ச்சியைக் கண்டு களிப்பதற்கான ரூபா பத்து பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுக்களை மாவீரர் அரங்கிற்குள் செல்வதற்கான நுழைவாயில்களில் இன்று பிற்பகல் 5.00 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

[இ]

## சென்னை விமான விபத்து: விசாரணை நடக்கும்

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிகழ்ந்த விமானத் தீ விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட இருக்கிறது.

கடந்த பத்தாம் திகதி சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து என்ஜின் தீப்பற்றியதால் எயர் லங்கா விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியது அது குறித்து விசாரணை நடத்த எயர் லங்கா நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

விபத்து ஏற்பட்ட சமயம் அந்த விமானத்தில் இருந்த கறுப்புப் பெட்டியை இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் தனது பாதுகாப்பில் வைத்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

(அ-எ)

## யெல்ட்சினின் கொள்கைகள்; ரஷ்ய சபாநாயகர் கண்டனம்

ரஷ்யத் தலைவர் பொறிஸ் யெல்ட்சினின் கொள்கைகளை ரஷ்ய நாடாளுமன்றச் சபாநாயகர் கண்டித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவில் யெல்ட்சினின் கொள்கைகளுக்கு எதிராக வேலைநிறுத்தம் நடைபெறலாம் என்று 45 சதவீதமானோர் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதால் விலைவாசிகள் பெரும் அளவு உயர்ந்துள்ளன என்றும்—

மக்கள் வறுமை நிலையை எதிர்நோக்குகின்றனர் என்றும்— கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

[உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### வடிவேலு குணரத்தினம்

புலோலி கிழக்கு பன்னைக்கட்டையை பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு குணரத்தினம் 13-1-92 அன்று காலமானார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரராசா [கிராமசேவகர்], தெய்வேந்திரன் [இலங்கை மின்சார சபை], செல்வராணி, சுகிர்தராணி [ஜெர்மனி], சுமதி [ஜெர்மனி], றஞ்சினி [ஜெர்மனி], மங்களம் [ஜெர்மனி], மகேந்திரன் [ஜெர்மனி], கஜேந்திரன் [ஜெர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளமணி [லிகிதர், விவசாயத் திணைக்களம்], சிவராசா [ராணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்], தியாகராசா [ஜெர்மனி], சௌந்தரராஜன் [ஜெர்மனி], லிங்கம் [ஜெர்மனி] ஆகியோரின் மாமனும்,, விஜயா [லண்டன்], மோகன் [லண்டன்], பாபு [லண்டன்], மீனா [ஜெர்மனி], கோபி [ஜெர்மனி], அர்ச்சுனா [ஜெர்மனி], இளவேணி [ஜெர்மனி], இளங்கீரன் [ஜெர்மனி], ஐங்கரன் ஆகியோரின் பேரனுமாவார்.

13-1-92 இல் நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புகூர்ந்து நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
கரவெட்டி. மனைவி, மக்கள்
[19345]

### ஆ. விசுவலிங்கம்

[துறைமுக அதிகாரசபை, கொழும்பு]

ஆ. விசுவலிங்கம் [துறைமுக அதிகாரசபை, கொழும்பு] காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி ஆறுப்பிள்ளையின் அன்பு மகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், சந்திரசேகரத்தின் அன்புத் தந்தையும், சோதிமதியின் மாமனாரும், காஞ்சனாவின் [யாழ். பல்கலைக்கழகம் இறுதி வருடம்] வளர்ப்புத் தந்தையும், செல்வமாணிக்கத்தின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [15-1-92] புதன்கிழமை அளவெட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தர் கூடவை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
தகவல்:
திருமதி விசுவலிங்கம்
[மனைவி]
[19357]

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவகுரு

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி மதவடி ஒழுங்கையில் வசித்தவருமான கந்தையா சிவகுரு 14-1-1992 இல் அகாலமரணமானார்.

இவர் காலம்சென்ற ஐ. கந்தையா – கதிராசிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சி. சண்முகநாதன், சி. சிவலிங்கநாதன் [நாதன்ஸ் யாழ்ப்பாணம்], திருமதி ப. மங்கையர்க்கரசி, யோகநாதன், திருலிங்கநாதன் [சிவநாதன்ஸ், யாழ்ப்பாணம்], சிவநாதன் [கனடா], இலங்கநாதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி, செல்வராணி, காலம்சென்ற பரமசாமி, விஜயலெட்சுமி, ஜீவரஞ்சினி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், சதானந்தன், கிருபானந்தன், நித்தியானந்தன், ரஜினி, கிருசாந்தி, பத்மரூபி, ஜெகதீபன், ரஜீவன், சதாநந்தினி, இராகுலன், சுபாஜினி, கேதீஸ்வரன், தனுஜா, வபிதா [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனும், காலம் சென்ற க. தம்பு, க. வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-1-1992 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 24/3, மதவடி ஒழுங்கை, கே.கே.எஸ். வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

மதவடி.
(19357)
தகவல்:
சி சிவலிங்கம்
[மகன்]

### வாரி இராசகிளி

அரியாலை, கண்டி வீதி ''சுரேஷ் ஸ்ரோர்ஸ்'' உரிமையாளர் வாரி இராசகிளி நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான வாரி–அன்னம்மா தம்பதிகளின் மகனும், பரம்சோதியின் கணவரும், சுரேஷ் [இத்தாலி], கீதா, லதா, சுதா, ராதா, ஐதா ஆகியோரின் தகப்பனாரும், மோகன், சந்திரசேகர், றெஜி ஆகியோரின் மாமனாரும், சிந்துசன், பானுசன், சிந்துஜா ஆகியோரின் பேரனும், துரைராசா, சரஸ்வதி. செல்வம், இராசமாணிக்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று மாலை 4-00 மணிக்கு 660½ கண்டி வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(19358) சந்திரசேகர் [மருமகன்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org